THAMIL UNITED LIBL ATION FRONT

*(Ceylon Thamils Official Party — H.Q. Jaffna, Sri Lanka)*

— ENGLAND BRANCH —

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

*Please reply to:*

**83 Ladywell Road,
(1st Floor)
Ladywell
London SE13 7JA
Tel: 01-690 9312**

தமிழீழ விடுதலை இயக்கம்
இங்கிலாந்துப் பிரிவு.

19.10.85.

அன்புடையீர்,

எதிர்வரும் 27.10.85. ஞாயிற்றுக்கிழமை, மாலை 6.30க்கு, தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் படுகொலை செய்யப்பட்ட எமது இரு தலைவர்களை நினைவு கூர்ந்தும், அப் படுகொலைகளை கண்டித்தும் ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

இந்தியன் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் உள்ள காந்தி அரங்கில் இக் கூட்டம் நடைபெறும் தருணம், தங்களது இயக்கத்தின் சார்பில் ஒரு பிரதிநிதியை இக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் இயக்க பிரதிநிதியாக கலந்துகொள்பவரின் பெயர் விபரத்தை எமது கிளையின் தலைவர் டாக்டர். சிறிநிவாசன் அவர்கட்கு – 01 500 2609 என்ற இலக்கத்திற்கு தொடர்புகொண்டு, அன்றில் எமது கிளை காரியாலயத்திற்கு –01 690 9312 என்ற இலக்கத்திற்கு தொடர்புகொண்டு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம். தயவுகூர்ந்து எதிர்வரும் 24.10.85க்கு முன்பாக பிரதிநிதியின் பெயரை அறியத்தருக.

தங்களது ஆதரவிற்கு முன்கூட்டியே நன்றி என கூறி,

அன்புடன்,

தலைவர், த.வி.கூட்டணி இங்கிலாந்துக் கிளை.